# أحاديث ليلة النصف من شعبان

# ஷஃபான் மாதத்தின் நடுப்பகுதி இரவு
## தொடர்பான ஹதீஸ்கள்


**إعداد**

القسم العلمي بمؤسسة الدرر السنية

**தொகுப்பு**

**அத்துரார் அஸ்ஸனிய்யா கலைக்களஞ்சியத்தின் அறிவியல் பிரிவு**

**مراجعة**

الشيخ علوي بن عبدالقادر السقاف

**மீள்பாரிசீலனை**

**அஷ்ஷெய்க். அலவி பின் அப்துல் காதிர் அஸ்-ஸக்காப்**

ترجمه

**محمد رَزِين محمد أكْبر**

(خريج كلية الحديث الشريف والدراسات الإسلامية والدبلوم العالي في التوجيه والإرشاد في الجامعة الإسلامية بالمدينة المنورة)

**தமிழில்**

**ரஸீன் அக்பர் மதனி**

அழைப்பாளர், தபூக் அழைப்பு நிலையம் – சவூதி அரபியா

بسم الله الرحمن الرحيم

## உள்ளே நுழைவதற்கு முன்...................

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகி அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். மேலும், அவனின் இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அன்னாரின் குடும்பத்தினர், அன்னாரை பின்பற்றி நடந்த - நடக்க இருக்கின்ற அனைவரின் மீதும் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் உண்டாவதாக.

**'ஷஃபான் மாதத்தின் நடுப்பகுதி இரவு தொடர்பான ஹதீஸ்கள்'** என்ற இச்சிறிய நூலின் அரபுமொழியிலான மூலவடிவத்தை அத்துஸரர் அஸ்ஸனிய்யா கலைக்களஞ்சியத்தின் அறிவியல் பிரிவால் தொகுக்கப்பட்டு அஷ்ஷெய்க் அலவி பின் அப்துல் காதிர் அஸ்-ஸக்காப் அவர்களின் மீள்பரிசீலனையின் பின்னர் அவர்களின் உத்தியோகபூர்வமான இணையதளமான **'அத்துரர் அஸ்ஸனிய்யா'** என்ற வலைதளத்தில் காணக்கிடைத்தது.

இச்சிறிய நூலில், ஷ.்.பானின் நடுப்பகுதியான 15ஆம் பிறை தொடர்பான விடயங்களை அடங்கியதாகவே தொகுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், அன்றைய தினத்தை எங்களுடைய சமூகம் ஒரு கொண்டாட்டதினமாகக் கருதி, இஸ்லாத்தில் கூறப்படாத விடயங்களை மார்க்கம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்துகின்றார்கள். மேலும், அதற்கு என்றே சில ஹதீஸ்களை ஆதாரமாகவும் எடுத்துக் காட்டுகின்றார்கள். எனவே, அப்படியாக அவர்கள் எடுத்துக்காட்டும் ;

- ஹதீஸ்கள் எவை?
- அந்த ஹதீஸ்கள் எப்படிப்பட்டன?
- அவைகளின் தராதரங்கள் எப்படிப்பட்டன?
- அவைகள் சம்பந்தமாக ஹதீஸ் துறை அறிஞர்களின் நிலைப்பாடு என்ன?

போன்ற விடயங்களை அழகான முறையில் 12 பக்கங்களைக் கொண்ட சிறிய நூலாக இருந்தாலும், காலத்திற்கு தேவையான அமைப்பில் பலவிடயங்களை உள்ளடக்கியதாக தொகுக்கப்பட்டிருந்தன. எனவே, இவைகளை தமிழ் பேசும் சகோதரர்களும் இதன் பயன் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் எனது சக்திக்குற்பட்ட விதத்தில் அல்லாஹ்வின் உதவியால் 24-04-2018 (ஹிஜ்ரி 1439 ஷ.்.பான் 08) ஆம் திகதி 'தமிழில் மொழியாக்கம்' செய்துள்ளேன்.

**மொழியாக்கத்தில் தவறுகள் இறுப்பின் அன்போடு சுட்டிக்காட்ட வேண்டுகிறேன்.**

நபியவர்களின் வழிகாட்டுதலில் அடிப்படையில் எம் வாழ்வை அமைத்துக்கொள்ள வல்லவன் அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள்பாளிப்பானாக!

**உங்கள் சகோதரன்,**

**றஸீன் அக்பர் (மதனி)**

**25/04/2018**

visit www.islamkalvi.com

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே. மேலும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!

ஷ.்.பானின் நடுப்பகுதி இரவைப்பற்றியும், அதன் சிறப்புகள் பற்றியும், அதனை உயிர்ப்பிப்பதின் சிறப்புக்கள் பற்றியும், அதன் இரவுகளை நின்று வணங்குவதைப் பற்றியும், அதன் பகல்பொழுதுகளை நோன்பு பிடிப்பது பற்றியும் அதிகமான அறிவிப்புக்கள் வந்துள்ளன. அவைகளில் அதிகமானவைகள் ஆதாரமற்றவைகளாகவே இருக்கின்றன.

இப்னுல் அரபி : ''ஷ.்.பானின் நடுப்பகுதி இரவு சம்பந்தமாக செவிமடுப்பதற்கு சமனான ஒரு ஹதீஸ்கூட கிடையாது.'' (ஆரிழதுல் அஹ்வதீ : 02/201)

பின் பாஸ் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : ''ஷ.்.பானின் நடுப்பகுதி இரவின் சிறப்பு சம்பந்தமான ஹதீஸ்கள் பலவீனமானவைகளாகும்.'' (மஜ்மூஉல் பதாவா : 01/192) மற்றுமொரு இடத்தில் : ''உறுதித் தன்மையற்றது'' (01/197)

இப்னு உஸைமீன் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : ''ஷ.்.பானின் நடுப்பகுதி இரவை நின்று வணங்குவதைக்கொண்டும், அதன் பகல்பொழுதுகளை நோன்பு பிடிப்பதைக்கொண்டும் சிறப்பிப்பது தொடர்பான ஹதீஸ்கள் பலவீனமானவைகள்.'' (மஜ்மூஉல் பதாவா : 07/280) மற்றுமொரு இடத்தில் : ''ஷ.்.பானின் நடுப்பகுதி இரவில் தொழக்கூடிய; குறிப்பிட்ட அறியப்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட தொழுகை தொடர்பான ஹதீஸ்கள் நபியவர்களின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளாகும்.'' (30/20)

எனவே, இவை தொடர்பான ஹதீஸ்களை; ஹதீஸ் அறிஞர்களின் தீர்ப்புக்களுடன் ஒரு கலைக்களஞ்சியமாக நாங்கள் தொகுத்துள்ளோம். இன்னும், அவைகளின் சிறப்புக்கள் பற்றி வந்தவைகளை பின்வருமாறும் அமைப்பில் தொகுத்துள்ளோம் :

1. அதன் இரவை உயிர்ப்பித்தல் சம்பந்தமாக வந்தவைகள்.
2. அதன் இரவில் நின்று வணங்குதல் சம்பந்தமாக வந்தவைகள்.
3. அதன் பகல் பொழுதில் நோன்பு நோற்பது சம்பந்தமாக வந்தவைகள்.
4. அதன் இரவில் பாவமன்னிப்பு தொடர்பாக வந்தவைகள்.
5. அந்த இரவில் குரோதக்காரன் அல்லது விபச்சாரம் செய்தவன் தவிர மற்றவர்களின் பாவமன்னிப்பு சம்பந்தமாக வந்தவைகள்.
6. இந்த இரவில் கேட்கப்படும் பிரார்த்தனைகள் நிராகரிக்கப்படாது தொடர்பாக வந்தவைகள்.
7. இந்த இரவில் நரகிலிருந்து விடுதலை செய்யப்படுவது தொடர்பாக வந்தவைகள்.
8. இந்த இரவில் கைப்பற்றப்படும் உயிர்களின் கணக்கெடுப்பு தொடர்பாக வந்தவைகள்.

visit www.islamkalvi.com

9. இந்த இரவில் ''குல்ஹுவல்லாஹு அஹத்'' ஓதுவதின் சிறப்பு தொடர்பாக வந்தவைகள்.
10. இந்த இரவிலே நிர்ணயிக்கப்பட்ட காலக்கொடு மற்றும் வாழ்வாதார விஸ்தீரணம் தொடர்பாக வந்தவைகள்.
11. இணைவைப்பாளன் அல்லது குரோதக்காரன் தவிர மற்ற அனைத்து முஸ்லிம்களின் பாவமன்னிப்பு தொடர்பாக வந்தவைகள்.

## முதலாவது : அதன் இரவை உயிர்ப்பித்தல் சம்பந்தமாக வந்தவைகள்.

1) அபூஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் : ''ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு கோடி ஹுருலீன்கள் வழங்கப்படும். யார் அதன் இரவில் ஒரு மணித்தியாலத்தை உயிர்ப்பிக்கின்றாரோ அவருக்கு சூரியன் சந்திரன் உதிக்கும் அளவிற்கு சுவனம் கொடுக்கப்படும், அதன் ஒவ்வொரு சுவனத்திலும் இரு தோட்டங்கள். இன்னும், அல்லாஹுத்தஆலா அவருக்காக சுவனத்தில் ஒரு கோடி நகரங்களை உயர்த்துகின்றனான். அதன் ஒவ்வொரு நகரங்களிலும் ஒரு கோடி கோட்டைகள், ஒரு கோட்டையில் ஒரு கோடி வீடுகள், ஒரு வீட்டில் ஒரு கோடி திண்ணைகள், ஒரு திண்ணையில் ஒரு கோடி தலையணைகள் மற்றும் ஒரு கோடி ஹுர்லீன்களிலிருந்து மனைவிமார்கள், ஒவ்வொரு ஹுர்லீன்களுக்கும் ஒரு கோடி பணிவிடையாளர்கள், ஒரு வீட்டில் ஒரு கோடி உணவு மரவைகள். அதன் அகலமோ கிழக்கு - மேற்கிற்கு மத்தியிலுள்ளவை போன்றதாகும். ஒவ்வொரு மரவையிலும் ஒரு கோடி கிண்ணங்கள், ஒவ்வொரு கிண்ணத்திலும் ஒரு கோடி நிரங்கள்.''([1])
2) குர்தூஸ் பின் அம்ர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் (அவர்களுக்கு நபியவர்களுடனான தோழமை இருந்தது என்று கூறப்படுகின்றது) : ''யார்; இரு பொருநாள் தின இரவுகளையும் ஷ.்.பானின் நடுப்பகுதி இரவையும் உயிர்ப்பிக்கின்றானோ, அவனின் உள்ளம்; உள்ளங்கள் மரணிக்கும் நாளில் மரணிக்காது.''([2])

---

1 ) **இமாம் அத்தஹபீ ;** 'மீஸானுல் இ.்.திதால்' (03/566) : இட்டுக்கட்டப்பட்டது என்கிறார்கள், **அல்லக்னவீ ;** 'அல்ஆஸார் அல்மர்பூஆ பில் அஹ்பார் அல்மவ்லூஆ' (84) : இப்னு நாஸிரின் குறைந்த பேணுதலினால் எப்படி இதனை அறிவித்தார் என்றே ஆச்சரியமாக உள்ளது. மேலும், அவரின் பலவீனத்தன்மையைப் பற்றி மௌனமாக இருந்தார். இன்னாலில்லாஹ்!!.

2 ) **இப்னுல் ஜவ்ஸி ;** 'அல்இலல் அல்முதனாஹிலா' (02/562), இந்த ஹதீஸ் நபியவர்களைத் தொட்டும் ஆதாரத்தன்யற்றதாகும். மேலும், இதிலே தீமைகள் அடங்கியுள்ளன.
**அத்தஹபீ ;** 'மீஸானுல் இ.்.திதால்' (03/308) : நிராகரிக்கப்பட்ட ஸபாபாக்களின் கூற்றாகும். 'தல்ஹீஸுல் இலல் அல்முதனாஹிலா' (185) : இதிலே, ஈஸா பின் இப்ராஹீம் அல்குரஷீ 'வாஹின்' (மிகவும் பலவீனத்தைவிட தாழ்வானவர்), மர்வான் பின் ஸாலிம் 'விடுபட்டவர்'.
**இப்னு ஹஜர் ;** 'அல்இஸாபா' (03/290) : இதிலே மர்வான் என்பவர் பொய்யர் என்று குறைகூறப்படுபவர், விடுபட்டவர்.

visit www.islamkalvi.com

3) முஆத் பின் ஜபல் றழியல்லாஹு அவர்களின் ஹதீஸ் : “யார் ஐந்து இரவுகளை உயிர்ப்பிக்கின்றானோ, அவனுக்கு சுவனம் கடமையாகின்றது: துல்ஹஜ் பிறை 08 , 09 , 10 மற்றும் நோன்புப் பெருநாள் இரவு, ஷ.்.பானின் நடுப்பகுதி இரவு.”([3])

## இரண்டாவது : அதன் இரவில் நின்று வணங்குதல் சம்பந்தமாக வந்தவைகள்.

1) ஹதீஸ் : ….ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்னிடம் வந்து கூறினார்கள் : இது ஷ.்.பானின் நடுப்பகுதி இரவாக இருக்கின்றது. அல்லாஹ்வின் மீது சத்தியமாக இவ்விரவில் கல்ப் கோத்திரத்து ஆட்டின் உரோமங்களின் எண்ணிக்கை அளவிலானவர்கள் நரகிலிருந்து விடுதலை செய்யப்படுவார்கள். இன்னும் அல்லாஹுத்தஆலா; (தனக்கு) இணைவைப்பவனையோ, குரோதமுடையவனையோ, உறவை துண்டித்திருப்பவனையோ, உடையை நீளமாக அணிபனையோ, தன் பெற்றோரை துண்புறுத்துபனையோ, மது அருந்துபனையோ பார்ப்பதில்லை. பிறகு நபியவர்கள் தனது ஆடையை விரித்து, ஆயிஷாவே! நீர் எனக்கு இவ்விரவில் தொழுவதற்கு அனுமதியளிப்பீரா? என்று வினவினார்கள். அதற்கு நான் : ஆமாம், என்று கூறினேன். எனவே, நபியவர்கள் எழுந்து (தொழுகைக்காக) நின்றார்கள். பிறகு அவர்களின் உயிர் கைப்பற்றுவிட்டதோ என்று எண்ணும் அளவிற்கு மிக நீண்ட நேரம் ஸுஜூது செய்தார்கள். ஆதலால், என் கையால் அவர்களின் இரு கால்களின் அடிப்பாகத்தை தடவியவுடன் அவர்கள் அசைந்தார்கள். எனவே, நான் சந்தோஷமடைந்தேன். இன்னும் அவர்கள் தன் ஸுஜூதில் பின்வருமாறு கூறினார்கள் : ‘அஊது பி அப்விக மின் இகாபிக, வ அஊதுபிக பி ரிழாக மின் ஸஹதிக, வஅஊது பிக மின்க, ஜல்ல வஜ்ஹுக லா உஹ்ஸீ ஸனாஅன் அலைக, அன்த கமா அஸ்னைத அலா நப்ஸிக, பலம்மா அஸ்பஹ தகர்துஹுன்ன லஹு.’ பின்னர், ஆயிஷாவே! அவைகளை நீர் கற்றுக்கொள்கிறாயா? என்று நபியவர்கள் வினவினார்கள். அதற்கு நான் : ஆமாம், என்றேன். அதற்கு நபியவர்கள், நீர் அவைகளை கற்றுக்கொள்வாயாக. ஏனெனில், ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்; அந்த வார்த்தைகளை எனக்குக் கற்றுத்தந்து, அவைகளை ஸுஜூதிலே திரும்பத்திரும்ப கூறுமாறும் ஏவினார்கள். ([4])

---

[3] ) **அல்அஸ்பஹானீ ;** அல்முன்திரீ அவர்களுடைய ‘அத்தர்ஙப் வத்தர்ஹீப் (02/158) , அல் முன்திரீ கூறினார் : இதனை ஹஸனானது என்று கூறுவதற்கு எந்த சந்தர்ப்பங்களும் கிடையாது.

**அல்பானீ ;** ‘ழஈபுத் தர்ஙப் வத்தர்ஹீப்’ (668) : இட்டுக்கட்டப்பட்டது.

[4] ) அல்பைஹகீ அறிவிக்கின்றார் ‘ஷுஅபுல் ஈமான்’ (03/383) (3837) : அதன் அறிவிப்பை பலவீனப்படுத்தியுள்ளார்.

**அல்பானீ ;** ‘ழஈபுத் தர்ஙப் வத்தர்ஹீப்’ (668) : இதனை மிகவும் பலவீனப்படுத்தியுள்ளார்.

visit www.islamkalvi.com

2) அலி பின் அபீ தாலிப் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் : ''ஷ∴பானின் நடுப்பகுதி இரவானால்; அதன் இரவில் நின்று வணங்கி, அதன் பகல்பொழுதுகளில் நோன்பு நோறுங்கள். நிச்சயமாக அல்லாஹுத்தஆலா அத்தினத்தின் சூரியன் மறையும் நேரத்தில் பூமிக்கு அருகாமையிலுள்ள வானத்திற்கு வந்து கூறுகின்றான் : என்னிடம் பாவமன்னிப்பு கேட்பவர்கள் யாருமில்லையா? அவர்களை நான் மன்னிக்கின்றேன். என்னிடம் ரிஸ்கை (வாழ்வாதாரத்தை) வேண்டுபவர்கள் யாருமில்லையா? அவர்களுக்கு ரிஸ்கை (வாழ்வாதாரத்தை) வழங்குகிறேன். நோய்வாய்ப்பட்டவர்கள் யாருமில்லையா? அவர்களுக்கு ஆரோக்கியத்தை வழங்குகிறேன். இப்படிப்பட்டவர்கள் இல்லையா? அப்படிப்பட்டவர்கள் இல்லையா? என்று சூரியன் உதயமாகும் வரை கூறிக்கொண்டே இருப்பான்.''([5])
3) ஹதீஸ் : ''இத்தொழுகையை இந்த இரவில் -அதாவது ஷ∴பானின் நடுப்பகுதி இரவில்- யார் தொழுகின்றானோ; அவன்மீது அல்லாஹ் 70 பார்வைகளை பார்க்கின்றான். அதன் ஒவ்வொரு பார்வையிலும் அவனுடைய 70 தேவைகளை பூர்த்தி செய்கின்றான். அவைகளில் மிவும் குறைந்தது, பாவமன்னிப்பாகும்.''([6])
4) அலி பின் அபீ தாலிப் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் : ''அலியே! யார் ஷ∴பானின் நடுப்பகுதி இரவில் 100 ரக்ஆத்துக்கள் தொழுது, அதன் ஒவ்வொரு ரக்ஆத்திலும் பாத்திஹா அத்தியாயத்திற்குப் பிறகு 'குல்ஹுவல்லாஹு அஹத்' என்பதை 10 தடவைகள் ஓதுகின்றவனுக்கு, அல்லாஹுத்தஆலா அவனுடைய அனைத்து தேவைகளையும் நிவர்த்தி செய்து வைக்கின்றான்.''([7])

---

[5]) இப்னு மாஜா (261) , அல்பைஹகீ 'ஷுஅபுல் ஈமான்' (03/378) (3822).
இதனை **இப்னு ரஜப் :** பலவீனப்படுத்துகின்றார் 'லதாஇபுல் மஆரிப்' (261),
**அல் இராகீ :** 'தஹ்ரீஜுல் இஹ்யா' (01/273),
**அத்தஹபீ ;** 'தல்ஹீஸு அல்இலல் அல்முதனாஹியா' (184) : இதிலே இப்னு அபீ ஸப்ரா : மிகவும் பலவீனத்தை விடத்தாழ்வானவர். மேலும், அவரின் ஆசிரியர் மோசமானவர்.
**அல்மிஸ்ஸீ ;** 'தஹ்தீபுல் கமால்' (21/79) : இதிலே அபூபக்ர் முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின அபீ ஸப்ரா உள்ளார். இவைரைப் பற்றி இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் கூறினார்கள் : 'ஹதீஸை இட்டுக்கட்டக்கூடியவர்', யஹ்யா இன்பு மஈன் அவர்கள் கூறினார்கள்: 'ஹதீஸில் பலவீனமானவர்', புஹாரி மற்றும் இப்னுல் மதீனீ கூறினார்கள் : 'பலவீனம்',
**அல்பூஸரீ ;** 'மிஸ்பாஹுஸ் ஸுஜாஜா' (01/247) : இந்த அறிவிப்பில் இப்னு அபீ ஸப்ரா உள்ளார், அவரின் பெயர் ; அபூ பக்ர் பின் அப்துல்லாஹ் பின் முஹம்மத் பின் அபீ ஸப்ரா,
**அஹ்மத் மற்றும் இப்னு மஈன் :** 'இவர் ஹதீஸை இட்டுக்கட்டுபவர்' என்று கூறியுள்ளார்கள்.
**ஸலாஹுத்தீன் அல்அலாஈ ;** 'அல்பதாவா' (37) : பலவீனமானவர் என்று ஹதீஸை அறிவிப்பவர்கள் உடன்படுகின்றார்கள்.
**அஷ்ஷவ்கானீ ;** 'அல்பவாஇத் அல்மஜ்மூஆ' (51)
**அல்பானீ ;** 'ழஈபுல் ஜாமி∴' (652) : இட்டுக்கட்டப்பட்டது.

[6]) **அல் இராகீ ;** 'தஹ்ரீஜுல் இஹ்யா' (01/273) : நிராகரிக்கப்பட்டது.

[7]) **இப்னுல் ஜவ்ஸி ;** 'அல்மவ்லூஆத்' (02/127). இது இட்டுக்கட்டப்பட்டது என்று இப்னுல் ஜவ்ஸி தீர்பளித்துள்ளார்.
**அஷ்ஷவ்கானீ ;** 'அல்பவாஇத் அல்மஜ்மூஆ' (50)

visit www.islamkalvi.com

## மூன்றாவது : அதன் பகல் பொழுதில் நோன்பு நோற்பது சம்பந்தமாக வந்தவைகள்.

அலி பின் அபீ தாலிப் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் : ‘‘ஷஃபானின் நடுப்பகுதி இரவானால் அதன் இரவில் நின்று வணங்குங்கள். மேலும், அதன் பகல்பொழுதுகளில் நோன்பு நோறுங்கள். நிச்சயமாக அல்லாஹுத்தஆலா அத்தினத்தின் சூரியன் மறையும் நேரத்தில் பூமிக்கு அருகாமையிலுள்ள வானத்திற்கு வந்து கூறுகின்றான் : என்னிடம் பாவமன்னிப்பு கோருவர்கள் யாருமில்லையா? அவர்களை நான் மன்னிக்கின்றேன். என்னிடம் வாழ்வாதாரத்தை வேண்டுபவர்கள் யாருமில்லையா? அவர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறேன். நோய்வாய்ப்பட்டவர்கள் யாருமில்லையா? அவர்களுக்கு ஆரோக்கியத்தை வழங்குகிறேன். இப்படிப்பட்டவர்கள் இல்லையா? அப்படிப்பட்டவர்கள் இல்லையா? என்று சூரியன் உதயமாகும் வரை கூறிக்கொண்டே இருப்பான்.’’([8])

## நான்காவது : அதன் இரவில் பாவமன்னிப்பு தொடர்பாக வந்தவைகள்.

ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ் : ‘‘ஷஃபானின் நடுப்பகுதி இரவானால்; கல்ப் கோத்திரத்து ஆட்டின்([9]) உரோமங்களின் எண்ணிக்கையை விட அதிகமான பாவங்களை மன்னிக்கின்றான்.’’([10])

## ஐந்தாவது : அந்த இரவில் குரோதக்காரன் அல்லது விபச்சாரம் செய்தவன் தவிர மற்றவர்களின் பாவமன்னிப்பு சம்பந்தமாக வந்தவைகள்.

1) ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ் : ‘‘நிச்சயமாக அல்லாஹுத்தஆலா ஷஃபானின் நடுப்பகுதி இரவில் தன் அடியார்களை எட்டிப்பார்க்கின்றான். எனவே, பாவமன்னிப்பு வேண்டுபவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்குகின்றான். அருளை வேண்டுபவர்களுக்கு அருளை வழங்குகின்றான். மேலும், வெறுப்புடைய கூட்டத்தினருக்கு அவர்களைப்போன்றே தாமதமாக்குகின்றான்.’’([11])

---

[8] ) இதனைப்பற்றி முன்னர் கூறப்பட்டு விட்டது.

[9] ) கல்ப் கோத்திரத்தினர் ; கோத்திரங்களிலே அதிகமான ஆடுகளை வைத்திருந்தவர்கள்.

[10] ) அஹ்மத் (26060), அத்திர்மிதி (739), இப்னு மாஜா (262), அல்பைஹகீ ‘ஷுஅபுல் ஈமான்’ (3824) ஹதீஸின் வார்த்தை இவருடையது, இமாம் புஹாரி ‘திர்மிதி’யில் உள்ள (739)தை பலவீனப்படுத்தினார்.

**அத்தஹபீ ;** ‘தல்ஹீஸு அல்இலல் அல்முதனாஹியா’ (183) , இப்னு ஹஜர் ; ‘தஹ்ரீஜுல் கஷ்ஷாப்’ (252), அல்பானீ ; ‘ழஈபுத் திர்மிதீ’.

[11] ) **அல்பைஹகீ ;** ‘ஷுஅபுல் ஈமான்’ (03/382) (3835). கூறினார்கள் : முர்ஸலுன் ஜெய்யிதுன்,

visit www.islamkalvi.com

2) அபீ ஸ.்.லபா அல்ஹுஃஸனிய்யு றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் : ‘‘ஷ.்.பானின் நடுப்பகுதி இரவானால் அல்லாஹுஃத்தஆலா தன் படைப்பினங்களை எட்டிப்பார்க்கின்றான். எனவே, மு.்.மினுக்கு பாவமன்னிப்பு வழங்குகின்றான், நிராகரிப்பாளர்களுக்கு கட்டளையிடுகின்றான், குரோதக்காரர்கள் அவர்களின் குரோதத்தை விடுகின்ற வரை அல்லாஹ் அவர்களை விட்டுவிடுகின்றான்.’’([12])
3) உஸ்மான் பின் அபில் ஆஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் : ‘‘ஷ.்.பானின் நடுப்பகுதி இரவானால் ஒரு அழைப்பாளன் அழைப்பான்: பாவமன்னிப்பு வேண்டுபவர்கள் யாருமில்லையா? அவனின் பாவங்களை மன்னிக்கின்றேன். கேட்பவர்கள் யாருமில்லையா? அவனுக்கு வழங்குகின்றேன். தன் மருமஸ்தானத்தால் விபச்சாரம் செய்தவள் அல்லது அல்லாஹ்வுக்கு இணைவைத்தவனைத் தவிர மற்றவன் கேட்கப்படும் விடயம் கொடுக்கப்பட்டே தீரும்.’’([13])

## ஆறாவது : இந்த இரவில் கேட்கப்படும் பிரார்த்தனைகள் நிராகரிக்கப்படமாட்டாது தொடர்பாக வந்தவைகள்.

அபீ உமாமா அல்பாஹிலி றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் : ‘‘ஐந்து இரவுகளில் கேட்கப்படும் பிரார்த்தனைகள் நிராகரிக்கப்படமாட்டாது : ரஜப் மாதத்தின் முதல் இரவு, ஷ.்.பானின் நடுப்பகுதி இரவு, ஜுஃம்ஆ இரவு, நோன்புப் பெருநாள் இரவு, ஹஜ்ஜுப் பெருநாள் இரவு.’’([14])

---

**அல்முன்திரீ** ; ‘அத்தர்ஃப் வத்தர்ஹீப்’ (02/132) : இதிலே ‘அல்அலாஉ பின் அல்ஹாரிஸ்’ என்பவர் ஆயிஷா நாயகியிடமிருந்து செவிமடுக்கவில்லை,

**அல்பானீ** ; ‘ழஃபுல் ஜாமிஇ’ (1739) , ‘ழஃபுத் தர்ஃப் வத்தர்ஹீப்’ (1654).

12 ) அத்தபரானீ (22/223) (590),

**அல்பைஹகீ** ; ‘ஷுஅபுல் ஈமான்’ (03/381) (3832) ஹதீஸின் வார்த்தை இவருடையது. ‘முர்ஸலுன் ஜெய்யிதுன்’ என்றார்கள்.

**இப்னுல் ஜவ்ஸி** ; ‘அல்இலல் அல்முதனாஹியா’ (02/782) : ஆதாரமற்றது.

**அத்தஹபீ** ; ‘தல்ஹீஸு அல்இலல் அல்முதனாஹியா’ (184) : இதன் அறிவிப்பாளர் வரிசையை பலவீனப்படுத்தியுள்ளார்.

**அல்ஹைஸமீ** ; ‘முஜம்மஉஸ் ஸவாஇத்’ (08/68) : இதிலே ‘அஹ்வஸ் பின் ஹகீம்’ என்பவர் பலவீனமானவர்.

**அல்பானீ** ; ‘ஸஹீஹுல் ஜாமிஇ’ (771, 1898) : ஹஸனானது (அதாவது: சிறந்தது) என்கின்றார்கள்.

13 ) **அல்ஹராஇதீ** ; ‘மஸாவிஉல் அஹ்லாக்’ (490) ,

**அல்பைஹகீ** ; ‘ஷுஅபுல் ஈமான்’ (03/383) (3836) ,

**அல்பானீ** ; ‘ழஃபுல் ஜாமிஇ’ (653) , ‘ஸில்ஸிலதுல் அஹாதீஸ் அழ்ழஃபா’ (7000) : பலவீனப்படுத்தியுள்ளார்.

14 ) **இப்னு அஸாகீர்** ; ‘தாரீஹு திமிஷ்க்’ (10/408) , இப்னு அஸாகீர் கூறினார்கள் : இதிலே ‘புன்தார் பின் அம்ர் அர்ரூபானீ’ , இவரை பொய்யன் என்று ‘அந்நஹ்ஷிய்யு’ கூறினார்கள்.

**அஸ்ஸுயூதி** ; ‘அல்ஜாமிஉ அஸ்ஸகீரு’ (3952),

**அல்பானீ** ; ‘ழஃபுல் ஜாமிஇ’ (2852) : இது இட்டுக்கட்டப்பட்டது என்கிறார்கள்.

visit www.islamkalvi.com

## ஏழாவது : இந்த இரவில் நரகிலிருந்து விடுதலை செய்யப்படுவது தொடர்பாக வந்தவைகள்.

1) ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ் : "ஷ.ஃபானின் நடுப்பகுதி இரவில்; கல்ப் கோத்திரத்து ஆட்டின் உரோமங்களின் எண்ணிக்கையை விட அதிகமானவர்களை அல்லாஹுத்தஆலா நரகிலிருந்து விடுதலை செய்கின்றான்."([15])
2) ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ் : "ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்னிடம் வந்து கூறினார்கள் : இது ஷ.ஃபானின் நடுப்பகுதி இரவாக இருக்கின்றது. அல்லாஹ்வின் மீது சத்தியமாக இவ்விரவில் கல்ப் போத்திரத்து ஆட்டின் உரோமங்களின் எண்ணிக்கை அளவிலானவர்கள் நரகிலிருந்து விடுதலை செய்யப்படுவார்கள். இன்னும் அல்லாஹுத்தஆலா ; (தனக்கு) இணைவைப்பவனையோ, குரோதமுடையவனையோ, உறவை துண்டித்திருப்பவனையோ, உடையை நீளமாக அணிபனையோ, தன் பெற்றோரை துண்புறுத்துபனையோ, மது அருந்துபனையோ பார்ப்பதில்லை."([16])

## எட்டாவது : இந்த இரவில் கைப்பற்றப்படும் உயிர்களின் கணக்கெடுப்பு தொடர்பாக வந்தவைகள்.

ராஷித் பின் ஸஃத் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் : "ஷ.ஃபான் மாதத்தின் நடுப்பகுதி இரவில்; இந்த வருடத்தில் உயிர் கைப்பற்றப்படவேண்டும் என்று விரும்புகின்ற ஆண்மாக்களின் உயிர்களைக் கைப்பற்றுமாறு உயிரைக் கைப்பற்றும் மலக்கிற்கு அல்லாஹுத்தஆலா வஹி அறிவிப்பான்."([17])

---

[15]) **இப்னுல் ஜவ்ஸி ;** 'அல்இலல் அல்முதனாஹியா' (02.560).
அவர்கள் கூறினார்கள் : 'அதாஉ பின் அஜ்லான்' தனித்து அறிவித்துள்ளார்,
யஹ்யா கூறினார் : ஒன்றுமில்லை, பொய்யன்; அவருக்கு ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டது. எனவே, அதனைக் கொண்டு அறிவிப்பார்,
**அர்ராஸி கூறினார் :** ஹதீஸில் விடுபட்டவர்
**இப்னு ஹிப்பான் கூறினார் :** உறுதியானவர்களிடமிருந்து இட்டுக்கட்டப்பட்டவைகளை அறிவிப்பார், இவரின் ஹதீஸை படிப்பினை நோக்கிலில்லாமல் வேறு காரணிகளுக்காக பதிவுசெய்வது ஆகுமானதல்ல.
**அஸ்ஸைலஈ கூறினார் ;** 'தஹ்ரீஜுல் கஷ்ஷாப்' (03.263) : (அதாஉ பின் அஜ்லான் தனியாக அறிவித்திருக்கின்றார், இப்னு மஈன் கூறினார் : ஒன்றுமில்லை, அல்பல்லாஸ் மற்றும் **அஸ்ஸ.ஃதீ கூறினார்கள் :** பொய்யன்.)
[16]) இதைப்பற்றி முன்னர் கூறப்பட்டுவிட்டது.
**அல்பைஹகீ ;** 'ஷுஅபுல் ஈமான்' (03.383) (3837). இதன் அறிவிப்பாளர் வரிசையை இமாம் அல்கைஹகீ அவர்கள் பலவீனப்படுத்தியுள்ளார்கள்.
**அல்முன்திரி ;** 'அத்தர்ஈப் வத்தர்ஹீப்' (03.391) : இதனை ஹஸனானது என்று கூறுவதற்கு எந்த சந்தர்ப்பங்களும் கிடையாது.
**அல்பானீ ;** 'ழஈபுத் தர்ஈப் வத்தர்ஹீப்' (1651) : இதனை மிகவும் பலவீனமாக்கியுள்ளார்.
[17]) அறிவிப்பவர் : அபூபக்கர் அத்தீனூரி 'அல்முஜாலஸா வ ஜவாஹிருல் இல்ம்' (944).
**அல்பானீ ;** 'ழஈபுல் ஜாமிஇ' (4019) : இதனை பலவீனப்படுத்தியுள்ளார்.

visit www.islamkalvi.com

## ஒன்பதாவது : இந்த இரவில் "குல்ஹுவல்லாஹு அஹத்" ஓதுவதின் சிறப்பு தொடர்பாக வந்தவைகள்.

அப்துல்லாஹ் பின் உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் : "யார் ஷ.்.பானின் நடுப்பகுதி இரவில் 100 ரக்ஆத்தில் 1000 தடவைகள் 'குல்ஹுவல்லாஹு அஹத்' என்பதை ஓதுகின்றானோ, அவனுக்கு அவனுடைய கனவில் 100 மலக்குமார்கள் அனுப்பப்படுகின்ற வரை அவன் உலகிலிருந்து வெளியேறமாட்டான். (அதிலே) 30 மலக்குகள் சுவனத்தை கொண்டு நன்மாராயம் கூறுவார்கள், 30 மலக்குகள் நரகிலிருந்து பாதுகாப்பு கோறுவார்கள், 30 மலக்குகள் பாவங்கள் செய்வதை விட்டும் பாதுகாக்கின்றார்கள், 10 மலக்குகள் அவனை தூரப்படுத்தியவர்களுக்கு சூழ்ச்சிசெய்கின்றார்கள்."([18])

## பத்தாவது : இந்த இரவிலே நிர்ணயிக்கப்பட்ட காலக்கொடு மற்றும் வாழ்வாதார விஸ்தீரணம் தொடர்பாக வந்தவைகள்.

1) ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ் : "அல்லாஹுத்தஆலா நான்கு இரவுகளில் ; காலக்கெடுவையும், வாழ்வாதாரத்தையும் தீர்மானிக்கின்றான்: ஷ.்.பானின் நடுப்பகுதி இரவு, ஹஜ்ஜுப் பெருநாள், நோன்புப் பெருநாள், அரபா தின இரவு."([19])
2) ஆயிஷா றழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஹதீஸ் : "இது எந்த இரவு என்பது உங்களுக்குத் தெரியுமா -அதாவது: ஷ.்.பானின் நடுப்பகுதி இரவு-? அதற்கு ஆயிஷா நாயகி : இதில் என்ன இருக்கின்றது!? என்று வினவினார்கள். அதற்கு நபியவர்கள் : இத்தினத்தில் தான் இவ்வருடத்தில் பிறக்கின்ற, மரணிக்கின்ற ஒவ்வொரு மனிதர்கள் பற்றியும் எழுதப்படுகின்றது. மேலும், இத்தினத்தில்தான் அவர்களின் செயல்கள் உயர்த்தப்படுவதுடன், அவர்களின் வாழ்வாதாரம் -ரிஸ்க்- இறக்கப்படுகின்றது."([20])

---

[18] ) **இப்னுல் ஜவ்ஸி ;** 'அல்மவ்லூஆத்' (02/128). இது இட்டுக்கட்டப்பட்டது என்று தீர்ப்பும் வழங்கியுள்ளார்.
**இப்னு தைமியா ;** 'மின்ஹாஜுஸ் ஸுன்னா' (07/39),
**இப்னுல் கையிம் ;** 'அல்மனார் அல்முனீப்' (78),
**அத்தஹபீ ;** 'மீஸானுல் இ.்.திதால் (03/633).

[19] ) **அத்தாரகுத்னீ ;** இதனை பலவீனப்படுத்தியுள்ளார். இக்கருத்து இப்னு ஹஜரின் 'லிஸானுல் மீஸான்' (01/582)

[20] ) **அல்பைஹகீ ;** 'பழாஇலுல் அவ்காத்' (26), 'அத்தஅவாத் அல்கபீர்' (02/145).
இன்னும் குறிப்பிட்டார்கள் : இந்த அறிவிப்பாளர் வரிசையிலே சிலர் புரக்கணிக்கப்படவேண்டியவர்கள் உள்ளனர். மேலும், அதிலே வலுப்படுத்தக்கூடிய சிலவையும் வந்துள்ளன.
**அல்பானீ ;** 'மிஷ்காதுல் மஸாபீஹ்' என்ற நூலின் ஹதீஸ்களை திரணாய்வு செய்யும்போது (1257) : இதற்கு என்று ஒரு அறிவிப்பாளர் வரிசையை நான் கண்டுகொள்ளவில்லை. பெரும்பாலும் இது பலவீனமானது.

visit www.islamkalvi.com

**பதினொறாவது : இணைவைப்பாளன் அல்லது குரோதக்காரன் தவிர மற்ற அனைத்து முஸ்லிம்களின் பாவமன்னிப்பு தொடர்பாக வந்தவைகள்.**

ஹதீஸ் : ''ஷ.்.பானின் நடுப்பகுதியானால்; இணைவைப்பாளன், குரோதக்காரனைத் தவிர தன் அடியார்களின் பாவங்களை அல்லாஹ் மன்னிக்கின்றான்.'' அறிவிப்பாளர் : அபூபக்கர் அஸ்ஸித்தீக்([21]), அபூஹுரைரா([22]), அப்துல்லாஹ் பின்

---

[21] ) அல்பஸ்ஸார் ; (01/157) (80) , அல்பைஹகீ ; 'ஷுஅபுல் ஈமான்' (03/380) (3827)

**புஹாரி ;** இமாம் புஹாரி அவர்கள் கூறியதாக ; இப்னு ஹஜரின் 'லிஸானுல் மீஸான்' (05/269)ல் குறிப்பிடப்பட்டுள்ளது : இது சந்தேகத்திற்குரியது.

**இப்னு அதீ ;** 'அல்காமில் பில் ழுஅபா' (06/535) : இந்த அறிவிப்பாளர் வரிசை நிராகரிக்கப்படக்கூடியது.

**அல்பஸ்ஸார் ;** 'அல்பஹ்ர் அஸ்ஸஹ்ஹார்' (01/157) : இதனை பலவீனவப்படுத்தியுள்ளார், மற்றுமொரு இடத்தில் (01/207) : இந்த அறிவிப்பாளர் வரிவையில் ஒரு குறைபாடு தென்பட்டாலும் அபூபக்கரின் மாண்பு இதனை ஹஸன் (சிறந்தது)ஆக ஆக்குகின்றது, இதிலே உள்ள அப்துல் மலிக் பின் அப்துல் மலிக் என்பவர் அறியப்படாதவர், இதனை சில அறிஞர்கள் அறிவிப்பதுடன் , பதிவுசெய்து, ஆதாரமாகவும் கொள்கின்றார்கள்.

**இப்னு ஹஜர் ;** 'தஹ்ரீஜுல் கஷ்ஷாப்' (252) : பலவீனப்படுத்தியுள்ளார்.

**அல்ஹைஸமீ ;** 'முஜம்மஉஸ் ஸவாஇத்' (08/68) இந்த அப்துல் மலிகின் மூலம்.

**அல்பகவீ ;** 'ஷரஹுஸ் ஸுன்னா' (02/513) : சில குறைபாடுகள் உள்ளது என்கின்றார்.

**அத்தஹபீ ;** 'மீஸானுல் இ.்.திதால்' (02/659) , இப்னுல் கைஸரானீ ; 'தஹீரதுல் ஹுப்பாழ்' (05/2805) : நிராகரிக்கப்பட்டது.

**இப்னு ஹுஸைமா ;** 'அத்தௌஹீத்' (01/326) என்ற நூலில் அல்லாஹுத்தஆலா இறங்குகிறான் என்பதை உறுதிப்படுத்த குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் முன்னுரையில் அவர் குறிப்பிடும் போது : ஆதாரபூர்வமான ஹதீஸ்களைத் தவிர வேறு ஹதீஸ்களைக்கொண்டு ஆதாரம்காட்டமாட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

[22] ) **அல்பஸ்ஸார் ;** 'கஷ்புல் அஸ்தார்' (02/435) (2045), அல்கதீப் அல்பக்தாதீ ; 'தாரீஹு பக்தார்' (14/285), இப்னுல் ஜவ்ஸி ; 'அல்இலல் அல்முதனாஹியா' (02/560).
இப்னுல் ஜவ்ஸி கூறினார்கள் : ஆதாரமில்லாது, இதிலே அறியப்படாதவர்கள் உள்ளனர்.

**இப்னு ஹஜர் ;** 'தஹ்ரீஜுல் கஷ்ஷாப்' (252) : இதன் அறிவிப்பாளரில் அறியப்படாதவர்கள் உள்ளனர்.

**அஸ்ஸஹாவீ ;** 'அல்அஜ்விபா அல்மர்ழிய்யா' (01/325) : இதன் அறிவிப்பாளர்களில் குறைகூறப்பட்டவர்கள் கிடையாது.

**அல்ஹைஸமீ ;** 'முஜம்மஉஸ் ஸவாஇத்' (08/68) : இதில் வரக்கூடிய 'ஹிஷாம் பின் அப்துர் ரஹ்மான்' அறியப்படாதவர். மேலும், இதன் மற்ற அறிவிப்பாளர்கள் உறுதித்தன்மையுள்ளவர்கள்.

visit www.islamkalvi.com

அம்ர்([23]), அபூ மூஸா அல்அஷ்அரிய்யு([24]), முஆத் பின் ஜபல்([25]), அவ்ப் பின் மாலிக்([26]), கஸீர் பின் முர்ரா.∴ அல்ஹழ்ரமீ([27]).

---

[23] ) ஆதாரம் : அஹ்மத் (02/176) (6642).
**அல்முன்திரீ ;** 'அத்தர்ஙப் வத்தர்ஹீப்' (03/392) : இதன் அறிவிப்பாளர் வரிசை மென்மையானது,
**அல்ஹைஸமீ ;** 'முஜம்மஉஸ் ஸவாஇத்' (08/68) : (இதிலே 'இப்னு லஹிய்யா' உள்ளார், இந்த ஹதீஸ் மென்மையானது, மேலும் ஏனைய அறிவிப்பாளர்கள் உறுதிபடுத்தப்பட்டவர்கள்.) அஹ்மத் ஷாகிர் ; 'முஸ்னத் அஹ்மத்' கிரந்தத்தின் ஹதீஸ்களை உறுதித்தன்மையை ஆய்வு செய்யும்போது இது (10/127) ''ஆதாரபூர்வமானது'' என்று குறிப்பிட்டுள்ளார்.
**அல்பானீ ;** 'ழஈபுர் தர்ஙப் வத்தர்ஹீப்' (621) : பலவீனமானது என்கின்றார்கள்.
[24] ) ஆதாரம் : இப்னு மாஜா (1148),
**அத்தஹபீ ;** 'தல்ஹீஸு அல்இலல் அல்முதனாஹியா' (184) : இதிலே 'இப்னு லஹிய்யா' பலவீனமானவர்,
**அல்பூஸிரீ ;** 'மிஸ்பாஹுஸ் ஸுஜாஜா' (01/247) : பலவீனப்படுத்தியுள்ளார். மேலும் அதற்கு (ஷாஹித்) சான்றும் உள்ளது.
**அல்பானீ ;** 'ஸஹீஹ் ஸுனன் இப்னு மாஜா' (1148) : ஹஸன் தரத்தில் அமைந்தது என்கின்றார்.
[25] ) ஆதாரம் : இப்னு ஹிப்பான் (12/481) (5665), அத்தபரானீ : (20/108) (215),
**அபூநுஅய்ம் ;** 'ஹில்யதுல் அவ்லியா' (05/191),
**அல்பைஹகீ ;** 'ஷுஅபுல் ஈமான்' (05/272) (6628).
**அபூநுஅய்ம் கூறினார் ;** 'ஹில்யதுல் அவ்லியா' (05/217) : அல்அவ்ஸாஈ தனித்து அறிவித்துள்ளார்.
**அல்ஹைஸமீ ;** 'முஜம்மஉஸ் ஸவாஇத்' (08/68) : இதன் அறிவிப்பாளர்கள் உறுதித்தன்மைவாய்ந்தவர்கள்.
**அல்பானீ ;** 'இஸ்லாஹுல் மஸாஜித்' (99) , 'ஸஹீஹுத் தர்ஙப் வத்தர்ஹீப்' (1026) : இதனை ஆதாரபூர்வமானது என்கின்றார்.
[26] ) ஆதாரம் : அல்பஸ்ஸார் (07/186) (2754),
**இப்னு ஹஜர் ;** 'தஹ்ரீஜுல் கஷ்ஷாப்' (252) : இதன் அறிவிப்பாளரில் 'இப்னு லஹிய்யா' உள்ளார்.
**அல்ஹைஸமீ ;** 'முஜம்மஉஸ் ஸவாஇத்' (08/68) : இதிலே ''அப்துர் ரஹ்மான் பின் ஸியாத் பின் அன்அம்'' உள்ளார். இவரை அஹ்மத் பின் ஸாலிஹ் உறுதியாக்குகின்றார், பெரும்பான்மையான அறிஞர்கள் இவரை பலவீனமாக்குகின்றார்கள். ''இப்னு லஹிய்யா மென்மையானவர்'', மற்ற அறிவிப்பாளர்கள் உறுதித்தன்மைவாய்ந்தவர்கள்.
[27] ) ஆதாரம் : இப்னு அபீ ஷைபா 'அல்முஸன்னப்' (10/438),
**அல்பைஹகீ ;** 'ஷுஅபுல் ஈமான்' (03/381) (3831), அல்பைஹகீ கூறினார்கள் : ''முர்ஸலுன் ஜெய்யிதுன்''
**அல்பானீ ;** 'ஸஹீஹுல் ஜாமிஇ' (4268) : ஆதாரபூர்வமானது என்கிறார்.

visit www.islamkalvi.com

**சுருக்கம் :**

அதன் இரவை தொழுகையிலும், பகல்பொழுதை நோன்பு நோற்பதிலும் உயிர்ப்பிப்பது கிடையாது. மேலும், அதிலே பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுவதுமில்லை, இந்த இரவில் நரகிலிருந்து விடுதலையாகுவதுமில்லை, கைப்பற்றப்படும் உயிர்கள் கணக்கிடப்படுவதுமில்லை, இவ்விரவில் 'குல்ஹுவல்லாஹு அஹத்' ஓதுவதின் சிறப்பும் இல்லை, இந்த இரவிலே காலக்கொடு மற்றும் வாழ்வாதார விஸ்தீரணமும் இல்லை. எனவே, ஷ.்.பானின் நடுப்பகுதி பற்றி ஒரு ஹதீஸ்கூட ஆதாரமில்லை என்று அறிஞர்கள் உடன்படுகின்றார்கள்.

அறிஞர்களின் பெரும்பான்மையானவர்கள் "இணைவைப்பாளன் அல்லது குரோதக்காரன் அல்லது வெறுப்புக்காரன் போன்றோரைத் தவிர, அனைத்து முஸ்லிம்களின் பாவங்களையும் மன்னிக்கப்படுவது" பற்றிய ஹதீஸை பலவீனப்படுத்துகின்றார்கள். என்றாலும், பிற்காலத்தில் வந்த சில அறிஞர்கள் இந்த ஹதீஸை ஆதாரமானது அல்லது ஹஸனானது என்று கூறுகின்றனர்.

**யாவும் அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே!**

**والحمد لله ربّ العالمين**

இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com
ONLINE ISLAMIC TAMIL LIBRARY

follow us on social media
/islamkalvi

ஆயிரத்துக்கு மேற்பட்ட தலைப்புகளில் வீடியோக்கள், கட்டுரைகள் மற்றும் மின் புத்தகங்கள்
குர்ஆன் ஓதவதற்கான எளிமையான தஜ்வீத் சட்டங்கள் • தொழுகை சட்டங்கள் மற்றும் துஆக்கள்
ஹஜ், உம்ரா செய்முறை விளக்கம் • ரமளான் சிறப்புகள் மற்றும் சட்டங்கள்
இதர மார்க்க விளக்கங்கள் மற்றும் சட்டங்கள் • வாரிசுரிமைச் சட்டங்கள் (பாகப்பிரிவினை)
அரபு மொழி மற்றும் இலக்கணப்பாடம் தமிழில் • சிறுவர்களுக்காக திருக்குர்ஆன் கூறும் கதைகள்
வரலாறு, கேள்வி பதில்கள், அகீதா தொடர்கள், மதங்கள் ஆய்வு
இஸ்லாம் அறிமுகம் மற்றும் புதிய முஸ்லிம்களுக்கான வழிகாட்டுதல்கள்